**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | DVC No. 6/2024 |
| Deposition of witness | RW- 1 |
| Name | திரு. ஜான்சன் ராஜ்குமார் |
| Father's Name | திரு. செல்வராஜ் |
| Village | ஆலங்குடி |
| Taluk | ஆலங்குடி, புதுக்கோட்டை |
| Age | 36/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of August 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி. கு.பரமேஸ்வரி Bench Clerk Grade III என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நானும், மனுதாரரும் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளோம் என்றால் சரிதான். என் ஊரில் இருந்து மனுதாரர் ஊர் சுமார் 50 கி.மீ என்றால் சரிதான். மனுதாரரை அந்நியத்தில் தான் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். இருவீட்டார்களும் நிச்சயம் செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். மனுதாரர் என்னைவிட வசதி கம்மியானவர் என்றால் இருவரும் சம வசதி உள்ளவர்கள்தான். திருமணம் முடிந்து மனுதாரர் என்னுடன் வீட்டில் எவ்வளவு நாட்கள் குடும்பம் நடத்தினார் என்றால் 7 வருடம். 7 வருடத்தில் மனுதாரர் 4 முறை கர்பமானார் என்றால் சரிதான். 4 முறையும் கர்ப்பம் கலைந்து விட்டது என்றால் சரிதான். மருத்துவர் எங்கள் இருவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்று சொன்னார் என்றால் மனுதாரருக்கு கர்ப்பபையில் பிரச்சனை என்று சொன்னார். அதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மனுதாரரிடமிருந்து விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனு பட்டுகோட்டை மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் IDOP NO. 84/2020 என்று பதிவு செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். IDOP NO. 84/2020

தள்ளுபடி செய்யப்பட்டதற்கான மேல்முறையீடு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

நான் திருமணத்திற்கு முன்பும், பின் தற்போது வரை குடிபோதையில் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் குடிபோதையில் இருந்ததால் மனுதாரர் அதை பிடிக்கவில்லை என்று சொன்னபோது நான் வலுகட்டாயமாக மனுதாரரிடம் உடலுறவு வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதனால்தான் மனுதாரர் உடல்நலம் பாதிக்கப்பட்டு வலுவிழந்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பத்தை மனுதாரர் என் வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லியும் அவர்கள் அதை கேட்டகவில்லை என்றால் சரியல்ல. மேற்படி IDOP NO. 84/2020 வழக்கில் சொன்ன சங்கதிகளை தான் இந்த வழக்கிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி IDOP NO. 84/2020 வழக்கில் எனது நீதிமன்ற விசாரணையில் எதிர்மனுதாரர் (மனுதாரர்) என்னைவிட வசதி குறைவானவர் என்றால் சரிதான் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது நான், என் அப்பா, அம்மா, அண்ணன் அனைவரும் ஒன்றாகதான் இருந்தோம் என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக வீடும், வாடகைக்கு விட்டுள்ள வீடும் உள்ளது என்றால் சரியல்ல, கீழ் வீடும், மேல் வீடும் உள்ளது ஆனால் வாடகைக்கு விடவில்லை. எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக 2 லாரிகள் இருந்தது அதில் 1 காணாமல் போய்விட்டது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக எடை போடும் Machine (Weigh bridge) உள்ளது என்றால் தற்போது இல்லை. எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக மர மில் உள்ளது என்றால் இல்லை. மனுதாரர் எப்படி வீட்டை விட்டு சென்றார் என்றால் அவரே சென்றுவிட்டார். விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு முன் நான் மனுதாரரை சேர்ந்து வாழ எழுத்து மூலமாக அழைத்தேனா என்றால் இல்லை, வாய்மொழியாக கூப்பிட்டேன். அதை விவாகரத்து மனுவிலும், இந்த வழக்கின் நிரூபண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான்

குடித்துவிட்டு மனுதாரரை கவனிக்காமல், நானும் என் குடும்பத்தார்களும் மனுதாரரை கொடுமை செய்து வேலைக்காரி போல் நடத்தி வந்ததோம் என்றால் சரியல்ல. நான் மனுதாரரிடம் அன்பாக நடந்து கொள்ளாமல் அவரை வீட்டை விட்டு விரட்ட அனைத்து வேலைகளும் செய்துவிட்டு, நானும், என் பெற்றோரும் மனுதாரரை வீட்டை விட்டு விரட்டிவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நானும், என் குடும்பத்தாரும் செய்த கொடுமை தாங்காமல் மனுதாரர் ஆலங்குடி நீதிமன்றத்தில் வரதட்சணை கொடுமை வழக்கு கொடுத்தார் என்றால் வழக்கு கொடுத்தார் ஆனால் பொய்யாக கொடுத்தார். அந்த வழக்கில் எனக்கு மட்டும் ரூ.1000 அபாரதம் விதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் அதற்கு மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை